Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

E EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 17 [01-07-93] வியாழக்கிழமை ஓசை 133

## 'கரும்புலிகள்' ஒலிப்பதிவு நாடா நாளை மாலை வெளியீடு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'கரும்புலிகள்' பற்றிய பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலைஅரங்கில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வெளியீட்டு விழாவில், முதல் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் மங்கள விளக்கேற்றி வைப்பார். விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார். வெளியீட்டுரையை திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் நிகழ்த்துவார். கரும்புலிகள் ஒலிப்பதிவு நாடாவை தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை (4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் புதிய நிபந்தனை விதிக்கவில்லை

# பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா தெரிவிப்பு

## அரச திணைக்களங்களுக்கான தேவைகளையே கோரினர்

(கொழும்பு)

'யுத்தக் கைதிகளை விடுவிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் புதிய நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை". இவ்வாறு யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா "டெய்லி நியூஸ்" பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். மேலும் அவர் யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்கள தலைவர்களுடன் ஆலோசித்து கூடுதல் தொகையை அனுப்புமாறே புலிகள் கோரினர் எனவும் குறிப்பிட்டார்.

யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து கருத்து வெளியிட்ட பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா 'விடுதலைப் புலிகள் மேலதிக நிபந்தனை எதையும் விதிக்கவில்லை' என்றார். எனினும் புலிகள் வடக்கிற்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்ட 43 பொருள்களின் அளவை அதிகரித்த தொகையில் அனுப்புமாறே கோரினர் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் திணைக்களங்களின் தலைவர்களுடன் ஆலோசித்து யாழ். அரச அதிபர் தயாரித்த பட்டியலின் அளவுப்படி அனுப்புமாறே புலிகள் தற்பொழுது கோருவதாகவும் இந்த விடயத்தை தீர்க்க சிலகாலம் பிடிக்கலாம் எனவும் தெரிவித்தார் அது வரையில் யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தக் கைதிகளினதோ உறவினர்களினதும் நிலைகுறித்து செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளப்படும் என்றார்.


## திணைக்களம் கோரியதை அனுப்பி வைக்க முடியாது

### - ஹமில்டன் வனசிங்க

(கொழும்பு)


யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்கள் தயாரித்த தேவைப்பட்டியலின் அடிப்படையில் வடபகுதிக்கு நாம் பொருள்களை அனுப்பிவைக்க முடியாதென கூட்டுப்படை... தேவையான பொருள்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு விடுதலைப்புலிகள் யாழ். அரச அதிபரைக் கோரியிருந்தனர். இவற்றையும் நாம் விநியோகிக்க வேண்டும் எனக் கோரினர். ... என்றோ, அது எப்போது கொழும்பிற்கு தெரிய வந்தது என்றோ கருத்துக்கூற ஹமில்டன் மறுத்துவிட்டார்.

இதேவேளை புலிகள் யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களங்...



நேற்று விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதி தொடர்பான உத்தியோகபூர்வ பத்திரத்தில் யாழ்.மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா கையொப்பம் இடுவதனையும் அருகே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பீற் சுவீஸர், யாழ். மாவட்ட தளபதி அன்பு ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

## விடுவிக்கப்பட்ட கைதி;



நேற்று விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதி தொடர்பான உத்தியோகபூர்வ பத்திரத்தில் யாழ்.மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா கையொப்பம் இடுவதனையும் அருகே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பீற் சுவீஸர், யாழ். மாவட்ட தளபதி அன்பு ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

# விடுவிக்கப்பட்ட கைதி; செஞ்சிலுவை பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

...கவீனமுற்றிருந்த போர்க் ...தி ஒருவர் நேற்று உத்தி ...யோகபூர்வமாக செஞ்சிலுவை ...சங்கத்திடம் ஒப்படைக்கப் ...பட்டார். நோய்வாய்ப்பட்ட ...வரை தலைவர் பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய இணங்கியிருந்தார். இதனையடுத்து போர்க்கைதியான செனதி குணவர்த்தனா (23) என்றபொலிசார் நேற்று நண்பகல் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப் பட்டார்.

யாழ். மாவட்ட விசேட தளபதி செல்வராசா இவரை சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி சுவீஸரிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார். இவருடன் உறவினர் எட்டுப்பேரும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## பிரிகேடியர் இவ்வாரம் யாழ். வரமாட்டார்

(கொழும்பு)

...அரசின் தூதுவரான பிரி...யர் ஆனந்த வீரசேகரா ...ண்டும் இவ்வாரம் யாழ்ப்பா...ம் செல்லமாட்டார் என ...ராணுவ வட்டாரங்களை ...மற்கோள்காட்டி டெய்லி ...யூஸ் செய்தி வெளியிட்டுள்...து.

பேச்சுவார்த்தை தொடர்...ான விடயங்கள் மீண்டும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டு விட்டன எனவும் அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

சிறிலங்கா அரசுக்கு ஏழைகள்

## இருட்டறையில் உள்ள கருகிய பொருளுக்கு சமன்

(வடமராட்சி)

சிறிலங்கா அரசாங்கத்தில் ஏழை மக்கள் இருட்டறையிலே உள்ள கரிய பொருளுக்குச் சமமானவர்கள். இப்போதும் எங்கள் விடுதலைக்கு விடுதலைப் புலிகளே மூலகாரணம். விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மனிதாபிமான முள்ள போர் வீரர். நான் நோய்வாய்ப்பட்ட போதும் மனிதாபிமான முறையில் என்னை விடுதலை செய்திருப்பது எமது சிங்கள அரசியலில் இல்லாத ஒரு நடைமுறை அவருக்கு நான் தலைவணங்குகிறேன்.

இவ்வாறு யுத்தக் கைதிகளில் ஒருவரான நோயாளியாகி தலைவர் பிரபாகரனினால் மனிதாபிமான முறையில் விடுவிக்கப்பட்ட களுத்துறையைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரான சரத்குணவர்த்தனா (வயது 20) பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து வடமராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்; சிறிலங்கா அரசாங்கம் எங்கள் மீது மூன்று வருடங்களாக காட்டி வந்த மௌனத்தை விடுதலைப் புலிகளே கலைத்தனர். இதனாலேயே எனக்கு இன்று விடுதலை கிடைத்தது. நாங்கள் விடுதலைப் புலிகளி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மக்களை காக்கும் பணியில் மேஜர் அழகன் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது இம் மோதலின்போது சிறிலங்கா கடற்படையினர் இழப்புகளுடன் தப்பி ஓடி விட்டனர்.

இம்மோதலில் ஒருவிடுதலை புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவ...ந்த கடற்புலி மேஜர் ...அழகன் (மார்க்கண்டு ...லன், நாகர்கோவில் வடக்கு, நாகர்கோவில்)எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



இவரது வித்துடல நாகர் கோவில் வடக்கிலுள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து கருத்து வெளியிட்ட பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா 'விடுதலைப் புலிகள் மேலதிக நிபந்தனை எதையும் விதிக்கவில்லை' என்றார். எனினும் புலிகள் வடக்கிற்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்ட 43பொருள்களின் அளவை அதிகரித்த தொகையில் அனுப்புமாறே கோரினர் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் திணைக்கள சங்களின் தலைவர்களுடன் ஆலோசித்து யாழ். அரச அதிபர் தயாரித்த பட்டியலின் அளவுப்படி அனுப்புமாறே புலிகள் தற்பொழுது கோருவதாகவும் இந்த விடயத்தை தீர்க்க சிலகாலம் பிடிக்கலாம் எனவும் தெரிவித்தார் அது வரையில் யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தக் கைதிகளிலேதும் உறவினர்களினதும் நிலைகுறித்து செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளப்படும் என்றார்.

## விபத்தில் மரணம்

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்கு துறையில் 'வாதுவ' கப்பலில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த தொழிலாளி மீது கப்பல் சிலிங் மோதிய

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# திணைக்களம் கோரியதை அனுப்பி வைக்க முடியாது

## - ஹமில்டன் வனசிங்க

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்கள் தயாரித்த தேவைப்பட்டியலின் அடிப்படையில் வடபகுதிக்கு நாம் பொருள்களை அனுப்பிவைக்க முடியாதென கூட்டுப்படை நடவடிக்கைகளுக்கான தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்ததாக நேற்றைய 'டெய்லி நியூஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அனைத்துத் திணைக்களங்களினதும் தலைவர்களுக்குத் தேவையான பொருள்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு விடுதலைப்புலிகள் யாழ். அரச அதிபரைக் கோரியிருந்தனர். இவற்றையும் நாம் விநியோக்க வேண்டும் எனக் கோரினர். ஆனால் இதை நாம் அனுமதிக்க முடியாது என கூட்டுப்படை தளபதி ஜெனரல் வணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபரின் புதிய பட்டியலில் என்ன பொருள்கள் குறிப்பிடப்பட்டிருந்தது என்றோ, அது எப்போது கொழும்பிற்கு தெரிய வந்தது என்றோ கருத்துக்கூற ஹமில்டன் மறுத்துவிட்டார்.

இதேவேளை புலிகள் யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களங்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான பொருள்களையே கோரியிருந்தனர் என்பதும், அதிலும், பொருள்கள் குறிப்பிடக்கூடிய அளவு வந்தடைந்ததும் கைதிகளை விடுதலை செய்யத் தயாராக இருந்தனர் என்பதும் தெரிந்ததே.

# நடுக்கடலில் நடந்த நாடகம்; 'றுகுணு' ஏற்படுத்திய குழப்பம்

(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட பொருள்களைஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'வந்த றுகுணு' கப்பல் அதிகாரிகள் மத்தியில் பெரும் குழப்பதை ஏற்படுத்தியது. இக்கப்பல் விவகாரம் நடுக்கடலில் சுமார் இரண்டு மணித்தியாலம் ஒருநாடகமாக அரங்கேறியது.

தடை செய்யப்பட்ட பல அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்த 'றுகுணு, என்ற கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து திரும்பியது காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் இருந்து மேற்படி கப்பல் கப்டனுக்கு கிடைத்த உத்தரவைத் தொடர்ந்தே இக்கப்பல் திரும்பிச் சென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலைகொழும்புத்துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட இக்கப்பல் நேற்று முன்தினம் திருக்கோணமலைத் துறைமுகத்துக்குத் திசைதிருப்பப்பட்டு, அங்கு தரித்து நின்றது.

### வடக்கு நோக்கி றுகுணு:

இக்கப்பலை பருததுத்துறை துறைமுகத்தைநோக்கி செலுத்தும்படி கப்பல் கம்பனி அலுவலகத்தில் இருந்து மேற்படி கப்பல் கப்டனுக்கு நேற்றுமுன்தினம் மாலை வானொலிச் செய்தி ஒன்று கிடைத்தது. இதைத்தொடர்ந்து அன்றைய தினம் மாலை 5-00 மணியளவில் திருக்கோணமலைத் துறைமுகத்தில் இருந்து இக்கப்பல் பருத்தித்துறையை நோக்கிப் புறப்பட்டது.

நேற்றுஅதிகாலை 4-00மணியளவில் இக்கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கே பொருள்களை எடுத்துவந்தது என்று இக்கப்பலின் கப்டன் கடற்படை கொமாண்டரிடம் கூறியதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 6-45 மணியளவில் 'றுகுணு' என்ற கப்பலும், ஏற்கனவே இத்துறைமுகத்தில் தரித்து நின்ற 'வாதுவ' என்றகப்பலும் பருத்தித்துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டன. 7-30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை இக்கப்பல்கள் வந்தடைந்தன.

### செயலகத்துக்கு தகவல்:

இதேவேளை 'றுகுணு' கப்பல் பருத்தித்துறைதுறைமுகத்தில் தரித்து நிற்பதாகவும், இதில் எடுத்துவரப்பட்ட பொருள்களைப் பொறுப்பேற்றுக்கொள்ளும்படியும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு மூலம் யாழ் செயலகத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கப்பல் குழப்பத்திற்கு படை-அரசு முரணேகாரணம்

அதிகாரி கருத்து

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் நேற்று றுகுணு கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி ஏற்றப்பட்ட சம்பவம் அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு படைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டையே காட்டுகிறது என சர்வதேச அமைப்பொன்றின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரின் கை ஓங்கி இருப்பதால் அரசாங்க அதிகாரிகள் தனித்து முடிவு எதையும் எடுக்க முடியாத நிலையில் இருப்பதாக தெரிவித்த அவர் நேற்றைய குழப்பங்களுக்குக் காரணம் அரசாங்க அதிகாரிகள்-பாதுகாப்புப்படை அதிகாரிகள் முரண்பாடாக இருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

## வாணிபம்தொழில்சான்றிதழ் கால எல்லை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாணிபம்/தொழில் சான்றிதழ் பெறுவதற்கான கால எல்லை எதிர்வரும் ஐந்தாம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தமிழீழ காவல்துறையினர் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளனர். அதன் முழுவிபரமும் வருமாறு:

தற்போதுள்ள போர்க்கால சூழநிலையில் எமது மக்களின் நலன்கருதி தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறையினரால் வாணிபம் செய்யும் சகல விதமான வர்த்தகர்களும் ''வாணிபம்/தொழிற்பதிவுச் சான்றிதழ்'' பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது. இதற்கான கால எல்லையும் சகல வர்த்தகர்களுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அக்கால

[4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற் குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6849)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சலகள் மூற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக்கழக மூன்வீதி. சுந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொள்ளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5220)

### உடன் விற்பனைக்குண்டு

வெள்ளைப் பேட்டுக் குஞ்சு, பிறவுண் சேவல் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு தொடர்பு; ''மல்லிகாபதி'' மானிப்பாய். (5252)


# ஜே. வி. பி. புத்துயிர்ப்பு; ராணுவ அதிகாரி அசட்டை

(கொழும்பு)

ஜே. வி பீ: அமைப்பு மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவுள்ளதாக வெளியான செய்திகள் நம்பமுடியாதவை என மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஜே வி. பியின் தற்போதைய தலைவர் எனக் கூறப்படும் சோமவன்ச அமரசேகரவின் உரையடங்கிய ஒலிப்பதிவு நாடா அண்மையில் லண்டனிலிருந்து விநியோகிக்கப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். ஜே விபியின் மிரட்டலை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என அவர்கள் குறிப்பிட்டனர்.

ஜே வி பியை நசுக்குவதில் பங்குபற்றிய படை அதிகாரி ஒருவர் ருத்து தெரிவித்த போது. அமைப்பின் முழுத் தலைமை பீடமும் அழிக்கப்பட்ட நிலையில் சோமவன்ச மட்டுமே எஞ்சியுள்ளார் ஜே. வி, பீ தலைவர் ரோகண விஜேவீர, பிரதி செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா, இராணுவப் பிரிவு தலைவர் சமன் பியசிறி பெர்னான்டோ ஆகியோர் கொல்லப்பட்டுவிட்டனர் என சுட்டிக்காட்டினார்.


## பாரதிதாசன் கல்வி நிலையம்

தமிழ்

G. A. Q.

பேராதனை

1996–ஆவணி

மீட்டல் வினாவிடை வகுப்பு

ஆரம்பம்

**3-7-1993**

திரு. சி. கணேசலிங்கம்

B. A. (Hons)

(சி-6924)

## BECON - யாழ்ப்பாணம்

O/L

DAY CLASS 1993 DEC.

புதிய பிரிவுகள்

ஆரம்பம்:

**1. 7. 93**

8. 00 am

யாழ் மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் சேவை

(சி-6915)


# கோழிகளுக்கு ஊசிபோடுதல்

யாழ். பேராலயத்திற்கு அண்மையில் உள்ள குருநகர் கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் யாழ். கால்நடை வைத்திய அதிகாரியினால் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி மருந்து இலவசமாகப் போடப்பட உள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயனடையுமாறு நிலையத்தலைவர் திரு பி. எக்ஸ் சேவியர் வேண்டுகோள் விடுத்துள்ளார், (24)

## கதிர்காமத் திருவிழா பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கதிர்காமத் திருவிழாக் காலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது. ஜூலை19 முதல் ஆகஸ்ட் 3வரை நடைபெறவுள்ள எஸல திருவிழாவின் போது 1000 பொலிசார் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் வாகனங்களும் இரவு - பகல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

# கடற்படையின் சூட்டிற்கு மீனவர் ஒருவர் படுகாயம்

(நமது நிருபர்)

மண்டைதீவு சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் நள்ளிரவு மீனவர் மீது நடாத்திய துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் பண்ணைக் கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த இம்மனுவேல் றொபேட் (வயது 32) என்பவரை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதனால் படுகாயத்திற்குள்ளான இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கரையோரங்களில் பொலிஸ்நிலையங்கள்

[மட்டக்களப்பு]

வாழைச்சேனை முதல் கல்குடா வரையிலான கரையோரப்பகுதிகளை கண்காணிக்கும் பொருட்டு 3 மைல் தூரத்திற்குள் மூன்று பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களில் வாகரைப் பகுதியிலிருந்து நாசிவன் தீவு கிராமம் ஊடாக கல்குடா. பேய்த்தாழை,வாழைச்சேனை ஆகிய பகுதிகளுக்கு புலிகள் ஊடுருவுவதாக கருதி உயர் அதிகாரிகளின் பணிப்பின் பேரில் இப்பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கல்குடாவில் குடியேற்றப்பட்ட சிங்கள மீனவர்களின் பாதுகாப்பை இப்போது பொலிஸார் ஏற்றுள்ளனர். எனினும இராணுவம் இப்பகுதியில அடிக்கடி ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## உதவிப் பொருள் வழங்கல்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் இருக்கும் அகதி முகாம்களில் தங்கியுள்ள சுமார் 180 குடும்பங்களுக்கு இன்று வியாழக்கிழமை காலை 10மணியளவில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினூடாக, உடுபிடைவைகள்,சமையல் பாத்திரங்கள் என்பவற்றை வழங்கவுள்ளது, உடுவில் உ. அ. அதிபர் பிரிவிலுள்ள சிந்து முகாம் - 21 குடும்பம், வளன் முகாம் -34 குடும்பம், ஆச்சிரம முகாம்-32 குடும்பம், றோய் முகாம்-17 குடும்பம், மல்வம் திருக்குடும்ப முகாம் - 97 குடும்பம் என்பவற்றுக்கே இவ்வுதவி வழங்கப்படவுள்ளது. (09)

## ஆங்கிலதின விழா

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய ஆங்கில தின விழா அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் இன்று நடைபெறுகின்றது இவ் ஆங்கில தின விழாவிலே உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு ந. அனந்தராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (25)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை அறிவித்தல்-1993

யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு வீதிவேலைப் பொருள்களுக்கான

1. கண்டகல்
2. கிறசர் சல்லி (கையால் உடைத்தது)
   ½''—3/4'', 1½''—2'' 4''—6''
3. மண்வகைகள் (ஊரி, நாகர் கோவில்)
4. உமி

ஆகியவற்றிற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கூறுவிலை யாழ் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 08-07-1993ஆம் திகதிவியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ரூ 500/ மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும், ரூபா 50/- கேள்விப்படிவக்கட்டணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் பிரதியில் சமர்ப்பித்தல் வேண்டும். கூறுவிலை யாவும்எதிர்வரும் 09-07-93 ஆம்திகதிநண்பகல் 12. 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப் பகுதி வீதிவேலைப்


# 'சிரித்திரன்' வெளிவந்துள்ளது

சிரித்திரன் ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது இதில் முன்முறுவல், நிலைக் கண்ணாடி, மகுடி பதில்கள். பின்சிரிப்பு, குறுமணி சிரித்திரன் அகராதி. சிக்கல் போட்டி ஆகிய வழமையான அம்சங்களுடன் புதிய சுவையானவிடயங்களும் இடம் பெற்றுள்ளன.

மேலும், சிறுகதைப்போட்டி முடிவு. 'ஒரு வைத்தியரின் தினக்குறிப்பேட்டிலிருந்து' இறுதிப் பகுதி, கவர் கவிதை, திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் எழுதிய 'சிரிப்பூச்சரம்' கட்டுரை போன்றவையும் வெளிவந்துள்ளது.

# 'சாளரம்' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஜூலை ஓகஸ்ட் மாத 'சாளரம்' இதழ் வெளிவந்துள்ளது. ஆசிரியர் தலையங்கம், அறிவுலகம், வெற்றிப்படியில் எமது மருந்துகள், விளையாட்டுச் செய்திகள், பதவிக்கு வரும் அரசும் பாழ்படும் விளை நிலமும், கலைச்சொல் அகராதி, தெறிப்பு, வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை, பயம் - பதற்றம், இளம்பிள்ளைகளின் சுவை உணர்ச்சிகளை விழிப்புறச் செய்யும் கல்வி முயற்சி, விவேகம் மிகுந்த பிள்ளைகளும் வித்தியாசமான பெற்றோரும், சிக்கனம் காக்க இரட்டைச் சூட்டடுப்பு, பொதுசமையல் கூடமும் பெண் விடுதலையும், அரும்புகள், எரித்திரியா புதிய ஒரு நாடு, பகலவன் பதில்கள், கையிலே கதிர்வீச்சுக் கருவி போன்ற அம்சங்களை இந்த இதழ் தாங்கி வெளிவந்துள்ளது.

## கும்பாபிஷேக தின விழா

அளவெட்டி வடக்கு ஐயனார் கோவில் கும்பாபிஷேக தினவிழா இன்று வியாழக்கிழமை காலை நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் சிறப்பாக நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# நினைவு கூருகின்றோம்... 1993-07-01

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா-அனந்தர்புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

★ **மதன்** (பழனியாண்டி செல்வராஜா - மலையகம்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரட்டையர் உட்பட 05 தமிழர்கள்.

திருமலை - பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு காணாமல் போய் பின் சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கணேஷ்** (ஜெகநாதன் சந்திரராசா - விவேகானந்தநகர்- கிளிநொச்சி)

**இலங்கேஸ்** (திசைவீரசிங்கம் இலங்கேஸ்வரன் - கோண்டாவில் வடக்கு. யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜக்சன்** (துரைராசா இராசகுமார் - புதியதெரு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 03 தமிழர்கள். சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

திருமலை அரசினர் மருத்துவமனைக்குள் புகுந்த சிறிலங்கா ஊர்காவல்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

கந்தளாய்ப் பகுதியில் ''ஜிகாத்குழு''வினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.


## JAFFNA ENGLISH ACADEMY

LUXINTENEBRIS

SPOKENESOL

(Spoken English for Speakers of Other Languages)

The learners will be taught to cope with informing, describing, narrating, instructing, eliciting, expressing, reporting, expanding, developing, clarifying, rephrasing etcetera. These situations cover the common demands of everyday life so that they can handle oral interaction with adequate confidence.

There are two versions of our courses - one aimed at young people and adults and one for young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months.

JUNIOR BATCH - (Between 9 and 13 years of age)

Weekends - 3 to 4.30 p. m. Commencement: 4 - 7 - 93

SENIOR BATCH - (Adults)

ஞ்சு உடன்
ொடர்பு;
ானிப்பாய்.
(5252)

யாழ் மாவட்ட முன்னணி
ஆசிரியர்களின் சேவை
(சி-6915)

தெரிவிக்கப்படுகிறது.
பொலிஸ் வாகனங்களும் இரவு - பகல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.


# ENGLISH ACADEMY

LUXINTENEBRIS

OL

(Spoken English for Speakers of Other Languages)

rs will be taught to cope with informing, describing, narrating, citing, expressing, reporting, expanding, developing, clarifying, rephras- These situations cover the common demands of everyday life so that dle oral interaction with adequate confidence.

two versions of our courses - one aimed at young people and adults young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months.

BATCH - (Between 9 and 13 years of age)
ends - 3 to 4.30 p. m. Commencement: 4 - 7 - 93

BATCH - (Adults)
ends - 4 - 30 to 6 p. m. Commencement: 4 - 7 - 93,
ays/Wednesdays - 4 - 30 to 6 p.m. Commencement: 5 - 7 - 93

res: By a panel of suitably qualified & experienced teachers of English.

N

training the students to provide excellent practice in distinct articulation.
ion: 3 Months
ends : 8 to 9 a. m. Commencement: 4 - 7 - 1993

CERTIFICATE IN ENGLISH (N C E JULY 93 Examination)
end classes : 3 to 4 - 30 p. m. Commencement : 19 - 6 - 1993
Lectures : KANDIAH NAVARENDRAN

FOR SPEAKERS OF OTHER LANGUAGES (E S O L)
Language is taught right from the beginning to acheieve high proficiency glish.
ends : 1 to 2 - 30 p. m. Commencement : 4 - 7 - 93.
Lectures : KANDIAH NAVARENDRAN

ENGLISH AS A FOREIGN LANGUAGE (TOEFL)
bus is designed to evaluate the English proficiency of persons whose ge is not English.
end Batch - 8 to 10 a. m.
lay/Friday Batch - 4 - 30 to 6 p. m. Commencement : 2 - 7 - 93
Lectures : KANDIAH NAVARENDRAN.

AND BUSINESS COMMUNICATIONS
those studying at school or college or university before entering employ- those acquiring or updating skills in employment, after a break in r when seeking a career change. The syllabus comprises the communi- s, lines of communication, oral presentation, delivery, using visual w, communication barriers, written communication, graphic communi- discussion, briefing sessions, public relations, social aspects of ns, mass media communications, customer relations etcetera.
tion : 6 Months. Tuesdays/Fridays - 3 to 4 - 30 p. m.
Lectures : KANDIAH NAVARENDRAN
Commencement: 2 - 7 - 93

ENGLISH COURSE
abuses are not intended to be exhaustive. The G. C. E. (Advanced s will also be covered. An ideal course for those who desire to acquire ls in English Language & Literature.
ation : One year.
kends : 4 - 00 to 6 . 00 p. m. Commencement : 4 - 7 - 93.
Lectures : KANDIAH NAVARENDRAN.

NE,
JAFFNA. (சி-6843)


யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு வீதிவேலைப் பொருள்களுக்கான

1. கண்டகல்
2. கிறசர் சல்லி (கையால் உடைத்தது)
½''—3/4'', 1½''—2'' 4''—6''
3. மண்வகைகள் (ஊரி, நாகர் கோவில்)
4. உமி

ஆகியவற்றிற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கூறுவிலை யாழ் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 08-07-1993ஆம் திகதிவியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ரூ 500/ மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும், ரூபா 50/- கேள்விப்படிவக்கட்டணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் பிரதியில் சமர்ப்பித்தல் வேண்டும். கூறுவிலை யாவும்எதிர்வரும் 09-07-93 ஆம்திகதிநண்பகல் 12. 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப் பகுதி வீதிவேலைப் பொருள்களுக்கான கூறுவிலை—1993'' எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் அவசியம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகரசபை மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29-06-1993 (சி/6923)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## சுப்பிரமணியம் சரஸ்வதி

தோற்றம் 7-11-1915 | மறைவு 1-6-1993

'நீ மெழுகுவர்த்தியாய் உருகி எரிந்தாய்
நாங்கள் மின் விளக்காய் ஒளிவீசுவதற்கு.

அன்புத்தெய்வமே,
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

மக்கள்!
திருமதி தையல்நாயகி ஜெயரத்தினம்,
சு பரமானந்தம், சு பத்மநாதன்,
(காலஞ்சென்ற) சு பரமநாதன்.

மருமக்கள்:
பொ ஜெயரத்தினம்
ப சறோஜினிதேவி,
ப வாசுகி ப.மைதிலி,
பேரப்பிள்ளைகள்.

185/1, கில்னர்லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (5245)

இந்தியப் படையினர் ... கையின் போது கைது செய்யப்பட்டு காணாமல் போய் பின் சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கணேஷ்** (ஜெகநாதன் சந்திரராசா - விவேகானந்தநகர்-கிளிநொச்சி)

**இலங்கேஸ்** (திசைவீரசிங்கம் இலங்கேஸ்வரன் - கோண்டாவில் வடக்கு, யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜக்சன்** (துரைராசா இராசகுமார் - புதியதெரு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 03 தமிழர்கள். சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

திருமலை அரசினர் மருத்துவமனைக்குள் புகுந்த சிறிலங்கா ஊர்காவல்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

கந்தளாய்ப் பகுதியில் ''ஜிகாத்குழு''வினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

வசாவிளான் - ஆலடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**பிரசாத்** (பாலிப்போடி மகேந்திரன் - சித்தாண்டி-மட்டு)

**சிவானந்தன்** (நடராசா நகுலேஸ்வரன் - 208, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய, நாட்டுப்பற்றாளரான -

**சிவபாதம் சுரேஸ்குமார்** (ஏழாலை தெற்கு)

மட்டு - படுவான் கரைப் பகுதியைச் சுற்றிவளைத்த பெரியபோரதீவு முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 உயர்வகுப்பு மாணவர்கள்.

1992ஆம் ஆண்டு புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பலவேகய 2இன் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கலைவாணன்** (அருணாசலம் லவக்குமார்- விலினையடி வீதி-அம்பாறை)

**சேனன்** (தங்கராசா தங்கப்பதக்கம் - சந்தையடி, கண்டாவளை - கிளிநொச்சி)

**அன்புமாறன்/கென்றி** [அன்ரன் அருள்நேசன் - 143/1, மருத்துவமனைவீதி, யாழ்]

வவுனியாவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சேரன்** [சித்திரவேல் தெட்சணாமூர்த்தி - 91, 2-ம் படிவம், தர்மபுரம், உதயநகர்- கிளிநொச்சி]

மட்டு - ஒந்தாச்சி மடத்தில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டு வீதியோரத்தில் வீசப்பட்ட 04 தமிழர்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6922)

## சிந்தனைக்கு

கபட வேடதாரி புனிதன்போல் பாசாங்கு செய்யும்போது மேலும் வேடதாரியாகிறான்.
- பிரான்ஸிஸ் பேக்கர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 01-07-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# சமாதானச் சூழலை கெடுத்த சிங்களப் பேரினவாதம்

இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடிய நிலையில் உருவாகி வந்த சந்தர்ப்பம் சிறிலங்கா அரசாங்கத்தினால் கெடுக்கப்பட்டுள்ளது. போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு அரசாங்கத்தால் முறிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இச் சமாதான சூழ்நிலை குழப்பமடைந்தது.

ஆரம்பத்தில் கைதிகள் தொடர்பான பேச்சுவார்த்தை முன்னேற்றம் கண்டபோது அரசியல் விமர்சகர்கள் பலர் இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அரசிற்கும் இடையில் ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவே கருதினர். வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்களும் அவ்வாறே விமர்சித்துள்ளன.

இச் சூழ்நிலையின் வெளிப்பாடாக அமைச்சர் தொண்டமானும், ''சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்தும், சிங்களக் கட்சிகளிடம் இருந்தும் அனுகூலமான சமிக்ஞைகளை எதிர்பார்த்திருக்கின்றேன். அவை கிடைக்குமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எனது முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்'' எனக் குறிப்பிட்டார்.

ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியான தீர்வு காணும் எந்தவிதமான முயற்சிகளையும் அது ஊக்குவிக்கத் தயாராக இல்லை, கைதிகள் விடுதலை தொடர்பான உடன்பாடானது பேச்சுவார்த்தைக்கும், சமாதானத் தீர்விற்குமான ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாக விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டி இருந்தபோதும் அரசாங்கம் அதனை முறித்துக் கொண்டது. பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

ஆனால், ''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே அரசாங்கம் விரும்புகின்றது'' என சிறிலங்கா ஜனாதிபதி, பிரதமர் உட்பட சக

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

## 3 சோமாலியப் பிரஜைகள் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பல நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று சோமாலியப் பிரஜைகளின் தற்கொலை முயற்சி பாதுகாப்பு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஜன்னல்கள் இல்லாத குளிரூட்டிய அறை ஒன்றில் பூட்டி வைக்கப்பட்டிருந்த மூவரும் றப்பர் தலையணைகளுக்குத் தீ மூட்டித் தங்களைத் தாங்களே எரிக்க எத்தனித்ததாக தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு அதிகாரி ஒருவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் அவர் மற்றப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தீயணைக்கும் பிரிவின் உதவியோடு தீயை அணைத்ததாகக் கூறப்படுகிறது.

பிரயாண ஆவணங்கள் இல்லாமல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்களைத் திருப்பி அனுப்புவதற்காக விமான நிலையத்தில் அறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டனர்.

ஒரு மாதகாலமாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்தே இவர்கள் தற்கொலை முயற்சியில் இறங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மூவரும் பல முறை விண்ணப்பித்தும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கட்டுநாயக்கா விமானநிலைய அதிகாரிகள் தரப்பில் சொல்லப்படுகிறது.

## உடைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டு தபால்கள்

இம்முறையும் வெளிநாட்டுக் கடிதங்கள் அனேகமானவை உடைக்கப்பட்டே வந்துள்ளன

வாதுவக்கப்பலில்471தபாற் பொதிகள் வந்துள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும் 417பொதிகளே யாழ். தபாற்கந்தோருக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. 417 பொதிகளுக்கு பதிலாக 471 பொதிகள் என தவறுதலாக தகவல் தங்களுக்கு தரப்பட்டிருக்கலாம் என தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை பொதிகளுள் உள்ள வெளிநாட்டு கடிதங்கள் அனைத்தும் உடைக்கப்பட்டே இம்முறையும்வந்துள்ளனவந்த பொதிகள் குறைவாக இருந்த போதிலும் ஒவ்வொன்றிலுள்ளும் கூடுதல் எண்ணிக்கையில் தபால்கள் இருந்ததாக தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அனேகமாக கடிதங்கள் இன்று முழுமையாக விநியோகிக்கப்பட்டுவிடுமென அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி) (பா)

## மீனவர் போல வேடமிட்டு இங்கிருந்து வெளியேறினேன்

உடுகம்பொல தகவல்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல இந்தியாவிற்கு படகுமூலம் தப்பிச்சென்ற போது மீனவர் வேடத்திலேயே தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் சென்ற படகு அரை மணிநேரத்தில் நடுக்கடலில் காத்திருந்த பெரிய படகு ஒன்றை சென்றடைந்ததும் அதன் மூலமாக அவர் இந்தியாபயணமானதாகதெரிவிக்கப்படுகிறது.

கடலில் இவர் சென்ற படகு இருநாட்கள் புயலினால் அலைக்கழிக்கப்பட்டு பின்னர் தூத்துக்குடியை சென்றடைந்ததாகவும், இவரை கூட்டிச் சென்ற இவரின் சகோதரர் மீண்டும் மொரட்டுவ திரும்பி விட்டதாகவும் கூறப்படுகிறது. உடுகம்பொல சென்னையிலும் புதுடில்லியிலும் வசித்துள்ளார்.

டி. பி. விஜயதுங்கா ஆட்சிக்கு வந்தபின் தமக்கு ஆபத்தில்லை என உணர்ந்த உடுகம்பொல இந்திய ஜனாதிபதியின் உதவியுடன் சென்னையில் உள்ள சிறிலங்கா துணை தூதரகம் மூலம் தற்காலிக கடவுச் சீட்டு பெற்று கொழும்பு திரும்பினார்.

# பாஸ்கரலிங்கத்திற்கொரு அக்கினிப் பரீட்சை

(கொழும்பு)

''எனது சகோதரர் லண்டனில் இருப்பது உண்மைதான். எனினும் நானோ அல்லது சகோதரரோ விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட எந்தத் தகவல்களையும் பரிமாறிக் கொண்டதில்லை.'' இவ்வாறு நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் 'சண்டே ரைம்ஸ்'சிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

'அமைச்சரவையின் கூட்டங்களில் தாங்கள் கலந்து கொள்வது குறித்து சிலமூத்த அமைச்சர்கள் அதிருப்தி கொண்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. அமைச்சரவைக் கூட்டங்களில் பேசப்படும் விடயங்கள் குறித்து லண்டனிலுள்ள உங்கள் சகோதரர் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு தகவல்களை நீங்கள் அளிப்பதாகக் கூறப்படுகிறதே, அது பற்றி என்ன கூற நினைக்கிறீர்கள்' என்ற சண்டே ரைம்ஸ் நிருபரின் கேள்விக்கு பதிலளித்த பாஸ்கரலிங்கம் மேலும் கூறுகையில்,

''முதலாவதாக இத்தகைய குற்றச்சாட்டுக்கள் குறித்து நான் அறியேன், எனினும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அதிகாரி நான் மட்டுமல்ல. அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகள் அழைக்கப்படுவது வழக்கம். அத்தகைய அதிகாரிகளும் நானும்ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் சம்பந்தப்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்வதுஉண்டு. எனினும் என்னை மட்டும் குற்றஞ்சாட்டுவது ஏன்? விடுதலைப் புலிகள் தொடர்பாக பேசப்பட்டவிடயம் எதையும் நான்அறியேன். நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட விடயங்களின்போது மட்டும் தான் நான் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்'' எனவும் தெரிவித்தார்.

நீங்கள் சென்னைக்கு அடிக்கடி செல்வதன் நோக்கம் என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த பாஸ்கரலிங்கம், ''எனது குடும்ப உறவினர்கள் பலரும் கலவரங்களை தொடர்ந்து சென்னையில் தான் வாழ்கிறார்கள் எனவே நான் அடிக்கடிசென்னைக்கு சென்று வர வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தவர்களாகிய நாங்கள் குடும்ப உறவுகளை நெருக்கமாகப் பேணுபவர்கள் என்பது தெரிந்ததே'' என்றார்.

''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்ட அன்றைய தினத்தில் நீங்கள் டிக்கெட் இல்லாமல் ஏயர் லங்கா விமானம் மூலம் லண்டன்வழியாக அமெரிக்கா சென்றீர்களே'' என்று கேட்கப்பட்டபோது;

''சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படுவதற்கான நிகழ்ச்சி நிரலை இறுதியாக்கும்பொருட்டு மேமுதல் திகதியன்று வாஷிங்டன் செல்வதற்கு முன்னாள் ஜனாதிபதியுடன் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஜனாதிபதி பிரேமதாசா கொலையுண்டதும், வாஷிங்டனுக்கான பயணத்தை ரத்து செய்வது பற்றி ஜனாதிபதி விஜயதுங்காவுடன் ஆலோசித்தேன். உதவி வழங்கும் நாடுகள் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டால் நாட்டுக்கு நல்லதல்ல என்று கூறப்பட்டது, நானும் அதை உணர்ந்தேன். அதன் அடிப்படையிலேயே பயணம் மேற்கொள்ளப்பட்டது. டிக்கட் மற்றும் இதர ஏற்பாடுகள் யாவும் பல வாரங்களுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனவே டிக்கட் இன்றிப் பயணம் செய்தது போன்றதான குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவை ஆகும்'' எனவும் பாஸ்கரலிங்கம் குறிப்பிட்டார்.

## படையினருக்கு உதவ சிங்களமக்களிடம்கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் போரிடும் சிறிலங்கா படைகளுக்கு சிங்கள மக்கள் முழு உதவி வழங்க வேண்டும் என காமினி ஜெயசூரியா மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

படையினருக்குதேவையான உணவு மற்றும் ஏனைய பொருள்களை அனுப்பி வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்து கொழும்பு பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிட்டுள்ளார்.

### விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

அறவழி மழலைகள் கல்விப் பூங்கா பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் கைதடி நுணாவிலில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திருமதி எஸ். செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. பி. சுந்தரம் பிள்ளையும், அதிபர் க. இளையதம்பி பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (42)

### மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி பரியோவான் முதலுதவிப் படைப்பிரிவு மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

### தரையிலிருந்து கல்விகற்கும் மாணவர்கள்

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தின் கீழ் இயங்கி வரும் புலோலி தெற்கு புற்றளை மகா வித்தியாலயத்தில், 3 வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 120 மாணவ, மாணவிகள் மேசை,கதிரை இல்லாது தரையில் இருந்து கல்வி கற்கிறார்களென்று தெரியவருகின்றது

## இளவரசர் அன்ட்ரூ சாரா விவாகரத்து

(லண்டன்)

பிரிட்டனின் எலிசபெத்மகாராணியின் இரண்டாவது புதல்வர் அன்ட்ரூவும், அவ

மேலதிக விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

தம்பதிகள் உத்தியோக பூர்வமாகப் பிரிந்துள்ளனர்

# கோபால்சாமியை ஓரங்கட்ட தி. மு. க. தலைமை முயற்சி

கூலமான சமிக்ஞைகளை எதிர்பார்த்திருக்கின்றேன். அவை கிடைக்குமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எனது முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்'' எனக் குறிப்பிட்டார்.

ஆனால், அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியான தீர்வு காணும் எந்தவிதமான முயற்சிகளையும் அது ஊக்குவிக்கத் தயாராக இல்லை, கைதிகள் விடுதலை தொடர்பான உடன்பாடானது பேச்சுவார்த்தைக்கும், சமாதானத் தீர்விற்குமான ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாக விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டி இருந்தபோதும் அரசாங்கம் அதனை முறித்துக் கொண்டது. பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைக் கெடுத்தது.

ஆனால், ''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவே அரசாங்கம் விரும்புகின்றது'' என சிறிலங்கா ஜனாதிபதி, பிரதமர் உட்பட சகலரும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கூறுகின்றனர். ஆனால், அதற்கான முன்முயற்சிகளை அவர்கள் எடுப்பதுமில்லை, முயற்சிகள் எடுப்போரை ஆதரிக்கவும் இல்லை. ஆனால், முயற்சிகள் எடுப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக யதார்த்தத்திற்குப் புறம்பான, தேவையற்ற, ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளைப் போடுவதில் தீவிரமாக உள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தனிநாடு ஒன்று அமைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை மூலம் சமாதான ரீதியில் ஒரு தீர்வு ஏற்பட முடியுமானால், தாம் சமஷ்டி ஆட்சிமுறையைப் பரிசீலிக்கத் தயாரென அறிவித்திருந்தனர். ஆனால், சிங்கள அரசு தரப்பினர் இதற்கு எதுவித ஆக்கபூர்வமான பதில் எதையும்இதுவரை கொடுக்கவில்லை. இனப்பிரச்சினைக்குத் திட்டவட்டமான தீர்வுத் திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை. மாறாக இனவாதத்தை மட்டுமே அவர்கள் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ''இனப்பிரச்சினைக்கு நீடித்த நிரந்தரத் தீர்வு காணும் முயற்சியில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என அரசாங்கத் தரப்பினர் அடிக்கடி கூறுவதில் அர்த்தம் எதுவுமில்லை. ஒரு பிரச்சினையில் தலைவர்கள் சந்திப்பதும், முடிவுகள் எடுப்பதும் இறுதிக் கட்டம். பிரச்சினைகள் முதலில் பேசப்பட்டு, அலசி ஆராயப்பட வேண்டும். இதை விடுத்து தேவையற்ற, நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பது அரசாங்கக் கட்சியினர் தம்மை தற்காத்துக் கொள்வதற்கான ஒருவகை நடவடிக்கையே ஆகும்:

உண்மையிலேயே அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பியிருக்குமானால், பேச்சுவார்த்தை ஏற்படக் கூடிய விதத்தில் உருவாகி வந்த ஒரு நல்லெண்ணச் சூழலைக் கெடுத்திருக்காது. அத்தோடு, இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருக்கும். ஆனால், அரசாங்கம் அவ்வாறு எதையும் செய்யவில்லை. மாறாக, உருவாகி வந்த நல்லெண்ணச் சூழலைக் கெடுத்துள்ளது. இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முடிவு என்பதை சிங்கள அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தியாவிற்கு படகுமூலம் தப்பிச்சென்ற போது மீனவர் வேடத்திலேயே தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் சென்ற படகு அரை மணிநேரத்தில் நடுக்கடலில் காத்திருந்த பெரிய படகு ஒன்றை சென்றடைந்ததும் அதன் மூலமாக அவர் இந்தியாபயணமானதாகதெரிவிக்கப்படுகிறது.

கடலில் இவர் சென்ற படகு இருநாட்கள் புயலினால் அலைக்கழிக்கப்பட்டு பின்னர் மீண்டும் மொரட்டுவ திரும்பி விட்டதாகவும் கூறப்படுகிறது. உடுகம்பொல சென்னையிலும் புதுடில்லியிலும் வசித்துள்ளார்.

டி. பி விஜயதுங்கா ஆட்சிக்கு வந்தபின் தமக்கு ஆபத்தில்லை என உணர்ந்த உடுகம்பொல இந்திய ஜனாதிபதியின் உதவியுடன் சென்னையில் உள்ள சிறிலங்கா துணை தூதரகம் மூலம் தற்காலிக கடவுச் சீட்டு பெற்று கொழும்பு திரும்பினார்.

தொடர்பாக பேசப்பட்டவிடயம் எதையும் நான்அறியேன். நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட விடயங்களின்போது மட்டும் தான் நான் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்'' எனவும் தெரிவித்தார்.

நீங்கள் சென்னைக்கு அடிக்கடி செல்வதன் நோக்கம் என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த பாஸ்கரலிங்கம், ''எனது குடும்ப உறவினர்கள்

யில் கைதடி நுணாவிலில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் திருமதி எஸ். செல்வராணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. பி. சுந்தரம் பிள்ளையும், அதிபர் க. இளையதம்பி பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(42)

ளது.

## தரையிலிருந்து கல்விகற்கும் மாணவர்கள்

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தின் கீழ் இயங்கி வரும் புலோலி தெற்கு புற்றளை மகா வித்தியாலயத்தில், 3 வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 120 மாணவ, மாணவிகள் மேசை, கதிரை இல்லாது தரையில் இருந்து கல்வி கற்கிறார்களென்று தெரியவருகின்றது

## இளவரசர் அன்ட்ரூ சாரா விவாகரத்து

(லண்டன்)

பிரிட்டனின் எலிசபெத்மகாராணியின் இரண்டாவது புதல்வர் அன்ட்ருவும், அவரது மனைவி சாராவும் உத்தியோக பூர்வமாக விவாகரத்து செய்து கொண்டிருப்பதாக பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள் கூறியுள்ளன. எனினும் இது பற்றிய மேலதிக விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

தம்பதிகள் உத்தியோக பூர்வமாகப் பிரிந்துள்ளனர் எனவும், அவர்கள் தனித்தனியாக வாழ்வார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. இளவரசர் தம்பதிகளுக்கு 5 வயதிலும் 3 வயதிலுமாக இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

ரஷ்ய பிரதமரின்

## அமெரிக்க விஜயம் திடீரென ஒத்திவைப்பு

(வாஷிங்டன்)

ரஷ்யப் பிரதமர் செர்னோமிஷன் மேற்கொள்ள இருந்த அமெரிக்க விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது ஆயுததொழில் நுட்பம் விற்பனை தொடர்பாக அமெரிக்காவுக்கும், ரஷ்யாவிற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பதுவே இந்த விஜயம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு ராக்கெட் என்ஜின்களை விற்கும் ரஷ்யத் திட்டம் தொடர்பாகவும், ராக்கெட் எரிபொருள் சாதனங்களை லிபியாவுக்கு அனுப்பும் ரஷ்ய முயற்சி குறித்தும், அமெரிக்கா அதிருப்தி கொண்டிருப்பது தெரிந்ததே.

எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை ஏழு தொழில்வள நாடுகளின் உச்சி மாநாட்டுக்குப் பின்னர் ரஷ்யப் பிரதமரின் விஜயம் தொடர்பான மறுதிகதி நிர்ணயிக்கப்படும் எனவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

## சதாம்உசைனைஎச்சரிக்கவே பக்தாத்மீது தாக்குதல்

– அமெரிக்க அதிபர் கிளின்டன்

(வாஷிங்டன்)

பக்தாத் மீது நடத்தப்பட்ட ராக்கட் தாக்குதல் அதிபர் சதாம் உசைனுக்கு ஒரு எச்சரிக்கையாகும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் கூறியுள்ளார். பயங்கரவாதத்திற்கு துணைபோகும் நாடுகளுக்கும் இது ஒரு எச்சரிக்கையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா தானே பயங்கரவாத செயலில் ஈடுபட்டிருப்பதாகவும், அச்சுறுத்தி மிரட்ட முற்படுவதாகவும் ஈராக் குற்றம் சுமத்தியுள்ளது.

## வெடிக்காத ஏவுகணைகள் ஈராக்கில் மீட்பு

(பக்தாத்)

ஈராக்கின் புலனாய்வுத் துறை தலைமை அலுவலகம் மீது அமெரிக்கா ஏவிய 23 'ரொம்புஹாக்' ரக ஏவுகணைகளில் நான்கு ஏவுகணைகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன. இவை பின்னர் ஈராக்கிய படைகளால் செயலிழக்கப்பட்டன.

இதே சமயம் ஏவிய 23 ஏவுகணைகளில் 16 ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கை தாக்கியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பக்தாத்திலுள்ள புலனாய்வுத்துறை தலைமை அலுவலகம் அருகே மூன்று பாரிய குழிகள் காணப்படுவதாக அங்குசென்ற செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கோபால்சாமியை ஓரம்கட்ட தி. மு. க. தலைமை முயற்சி

(சென்னை)

வை. கோபால்சாமியை தனிமைப்படுத்த தி. மு. க. தலைமை முயற்சி செய்து வருவது நெல்லையில் அண்மையில் நடந்த கருணாநிதியின் பிறந்தநாள் விழாவில் வெளிப்படையாகத் தெரிந்ததாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வை. கோபால்சாமியின் ஆதரவாளர்களை நீக்கினால் அவரை தனிமைப்படுத்தலாம் எனகட்சியின் தலைமை முடிவு செய்து தற்போது செயற்படுத்திவருவதாக தி. மு.க. ஆதரவாளர்கள் வருத்தம் தெரிவித்தனர். கருணாநிதி பிறந்த தினத்தையொட்டி நடந்த பல நிகழ்ச்சிகளில் வை. கோபால்சாமி கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் சில கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்ளகட்சித்தலைமை தடைவிதித்திருந்ததாம். இதனால் கூட்டத்தைகுறைத்து காட்டுவதோடுதொண்டர்கள்மத்தியில் கோபால்சாமியின் செல்வாக்கு குறைந்து வருவதாக வெளியில் காட்டலாம் என தி,மு.க. தலைமை முடிவு செய்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் வை. கோபால்சாமி கலந்து கொண்ட கூட்டங்களில் வழமைக்கு மாறாக கட்சி பிரமுகர்களின் ஆதிக்கம் இல்லாவிடினும் தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் காணப்பட்டனர்.

## தினமும் தீக்குளிப்பு இளைஞரணி எச்சரிக்கை

(சென்னை)

தி மு. கவிலிருந்து நீக்கப்பட்ட நாஞ்சில் மனோகரன் மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டால் கட்சியின் இளைஞர் அணியின் தொண்டர்கள் ஒரு நாளுக்கு ஒருவராக தீக்குளிப்பர் என கட்சித் தலைவர் கருணாநிதியின் மகனும்கட்சியின் இளைஞர் அணித் தலைவருமான மு.க.ஸ்ராலின் எச்சரித்துள்ளார். இளைஞர் அணியில் முக்கிய பிரமுகராக இருக்கும் வை கோபால்சாமியின் நெருங்கிய சகாவாக நாஞ்சில் மனோகரன் இருந்தமையே அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட காரணம் என்றும் கூறப்படுகிறது.

## தி. மு. கவின் உதவியை காங்கிரஸ் நாடியது

கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் தம்மை அணுகி தி. மு. கவின் ஆதரவைக்கோரி அதற்கு பிரதியுபகாரமாக அ. தி மு. க. ஆட்சியைக் கலைப்பதாகவும் தம்மிடம் கூறியதாக மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் காங்கிரஸ் நுழைய நாம் அனுமதிக்க மாட்டோம். ஜெயலலிதாவே ஆட்சியில் இருக்கட்டும். எதிர்க்கட்சியாக நாம் இருப்பதில் எமக்கு திருப்தியே என்றும் கருணாநிதி குறிப்பிட்டார்.

எனினும் காங்கிரஸ் தி.மு.க. உதவியை நாடியதாக கருணாநிதி கூறியதை வாழப்பாடி ராமமூர்த்தி மறுத்துள்ளார்.

## தி.மு.க, அ.தி.மு.க வுடன் காங்கிரஸ் கூட்டு சேராது

வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

தி.மு.க. மற்றும் அ.தி.மு.க ஆகியவற்றுடன் எந்தக் கால கட்டத்திலும் காங்கிரஸ் எந்த உறவையும் வைத்துக் கொள்ளமாட்டாது என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று தெரிவித்தார். தமது கட்சி இனி தேர்தல்களில் தனித்தே போட்டியிடும் என்றார்.

தி மு.க தனது உட்கட்சி பிரச்சினையிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப காங்கிரஸ் மீது களங்கம் கற்பித்து வருவதாகவும் வாழப்பாடி குற்றஞ் சாட்டினார்.

## நாஞ்சில் - கருணாநிதி ஒன்றரை மணிநேர பேச்சு

(சென்னை)

தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்ட நாஞ்சில் மனோகரன் நேற்று கட்சியின் தலைவர் மு. கருணாநிதியை சந்தித்துப் பேச்சு நடத்தினார். பேச்சுக்கள் ஒருமணி நேரம் நீடித்தன. இச்சந்திப்பின் பின்னர் கருத்துத்தெரிவித்த நாஞ்சில் மனோகரன், தம்மை கட்சியில் மீண்டும் சேர்க்குமாறு தாம் விடுத்த கோரிக்கைக்கு நல்ல பதிலை எதிர்பார்த்துள்ளதாகக் கூறினார்.

## வீரப்பனின் சகா நீதிமன்றில் சரண்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் நெருங்கிய சகா எனப்படும் ஐயன்துரை என்பவர் மைசூர் மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் நேற்று முன் தினம் சரணடைந்துள்ளார்.

# அகதிகள்வருகையைதடுக்க கனடாவில் புதிய அமைச்சு

## புதிய பிரதமர் நடவடிக்கை

(ஒட்டாவா)

கனடாவில் குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்த புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கனடாவில் புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் கிம் காம்பெல் பொது பந்தோபஸ்து அமைச்சு என்ற புதியதோர் அமைச்சை இதற்கென உருவாக்கியுள்ளார். இந்த அமைச்சு கனடாவின் பொலிஸ் மற்றும் சுங்க நிருவாகங்களை கவனிக்கும் அதேவேளை சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் வருகையையும், கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

குடியேற்ற வாசிகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பை கையேற்கவிருக்கும் பொது பந்தோபஸ்து அமைச்சு குடிவரவு-அகதிகள் சபையின் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் இந்த குடிவரவு அதிகாரிகள் சபைதான் கனடாவில் அகதிகள் அந்தஸ்துக்கோரி வருடாந்தம் விண்ணப்பிக்கும் சுமார் 30 ஆயிரம் வெளிநாட்டவர்களின் விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்கிறது.

கடவுச்சீட்டு அலுவலகத்தையும் புதிய அமைச்சே நடத்தும். இது காலவரை ''ரெவினியூ கனடா'' என்ற அமைப்பிடம் இருந்த எல்லையோர சுங்க பரிசோதனையையும் இந்த அமைச்சு பொறுப்பேற்கிறது.

குடியேற்ற வாசிகளின் வருகை கனடிய சமுதாயத்துக்கான ஓர் அனுகூலமான பங்களிப்பு என்று நோக்கப்படும் நிலையில் இருந்து பொது ஒழுங்குக்கான ஓர் அச்சுறுத்தலாக நோக்கப்படும் நிலைக்கு மாறுகிறது என்பதையே புதிய நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது என கனடாவில் இருக்கும் பெண்களின் அந்தஸ்துக்கான தேசிய நடவடிக்கைக் கமிட்டியின் தலைவியும், இந்தியருமான சுனீரா தொபானி தெரிவித்தார்.

கள்ளக்கடத்தல் மற்றும் சட்டவிரோத குடியேற்றவாசிகள் பிரவேசம் ஆகியவை உட்பட சட்டம் ஒழுங்கு தொடர்பாக கனடியர்கள் மத்தியில் அதிகரித்துவரும் விசனத்தை கணக்கில் எடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என கனேடிய அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பல கலாசார சமூக அமைப்புக்கு எதிரானவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே கன்சவேட்டிவ் கட்சியினர் இந் நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# 40 இலங்கையர்கள் ரூமேனியாவில் கைது

(புக்காரெஸ்ட்)

முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றான மோல்டாவிலிருந்து கடந்த வாரம் ரூமேனியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த 40 இலங்கையர்களை ரூமேனிய எல்லைப் படையினர் கைது செய்து மீண்டும் மோல்டோவிற்கே திருப்பியனுப்பினர்.

இலங்கையிலிருந்து புறப்பட்டு முன்னாள் சோவியத்யூனியனூடாக ரூமேனியா வந்த இவர்கள் 17க்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இந்த பயணத்திற்கென இவர்களை கூட்டிவந்த முகவருக்கு தலா 250 டொலர் வீதம் இவர்கள் வழங்கியிருந்தனர். ரூமேனியா ஊடாக இவர்கள் மேற்கு ஐரோப்பா செல்ல திட்டமிட்டிருந்தனராம்.

# வடகிழக்கு அகதிகளுக்கு ஜேர்மனி 28கோடி உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள அகதிகளுக்கென ஜேர்மனி 28கோடி ரூபாவை வழங்குகின்றது. அகதிகளுக்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கான பல திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களும் மேற்கொள்ளவுள்ளன.

தற்போது 28அரசசார்பற்ற நிறுவனங்கள் வடக்கு கிழக்கு அகதிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகின்றன நிதி உதவிக்கான ஒப்பந்தத்தில் ஜேர்மன் தூதுவரும், நிதியமைச்சின் செயலர் பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்


## விற்பனைக்கு வந்துவிட்டன

எமது அடுத்த தொகுதி புத்தகங்கள்

விற்பனைக்கு வந்து விட்டன


## இல்ல விளையாட்டு

ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையினதும், கலைமகள் பாலர் பாடசாலையினதும் இரண்டாவது வருடாந்த விளையாட்டுவிழா யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு அரங்கில் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது

## அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அராலித்துறை கண்ணிவெடி சம்பந்தமான சர்வதேச விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அமர்வுகால அறிக்கையாக வெளியிட அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

# சிறிலங்கா அமைச்சரவை; விரைவில் மாற்றம்

### பல புதிய முகங்கள் வரலாம்

அடுத்த சில வாரங்களில் சிறிலங்கா அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாம் என அரச உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ஜோன் அமரதுங்க நியமிக்கப்படலாம் என்றும் அமைச்சரவைக்குள் பல புதிய முகங்கள் பிரவேசிக்கலாம் எனவும் தெரியவருகிறது.

ஆனால் நிதியமைச்சர் பதவியை தன்வசம் தொடர்ந்து ஜனாதிபதியே வைத்திருப்பார் என்றும் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய காலகட்டம் அண்மித்துக் கொண்டிருக்கையில் வேறொருவரிடம் அப்பதவியை வழங்க அவர் விரும்பவில்லை எனவும் தெரியவருகிறது

அரசாங்க நிருவாகத்தை சீராக்குவது தொடர்பான வழிவகைகளை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி விஜயதுங்க ஆராய்ந்து வருவதாகவும் இதுகுறித்து சில சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஆலோசித்துள்ளார் எனவும் அறியவருகிறது.

---

வாணிபம்

எல்லை ஏற்கனவே முடிவுற்றிருந்தாலும் அவ் வாணிபத் தொழில் சான்றிதழ் பெறாத சகல வர்த்தகர்களையும் எதிர்வரும் 05-07-93 திங்கட்கிழமைக்கு முன்னதாக அவ் அனுமதிச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ் வாணிப சான்றிதழ்களைப் பெறத்தவறுவோர் மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தந்த பிரதேசங்களில் உள்ள தமிழீழ காவல்துறையின் காவல் பணிமனைகள் மேற்கொள்ளும் என்பதை அறியத்தருகிறோம்.

---

விபத்தில்

தில் தொழிலாளி படுகாயமடைந்து பின்னர் மரணமானார்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தின் போது மயிலிட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவபாலன் என்பவரே இவ்

# நருக்கடலில்...

### திட்டப்பணிப்பாளர் துறைமுகம் விரைவு:-

நேற்றுக்காலை 8.00 மணியளவில் கிடைத்த இத்தகவலைத் தொடர்ந்து யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலில் வந்த பொருள்களைப் பொறுப்பேற்பதற்காக பருத்தித்துறை துறைமுகத்துக்கு விரைந்தார்.

கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களின் பட்டியல் திட்டப்பணிப்பாளரிடம் வழங்கப்பட்டு பொருள்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதற்கான பத்திரம் ஒன்றும்திட்டப் பணிப்பாளரால் ஒப்பமிடப்பட்டது.

### நாடகம் ஆரம்பம்:-

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்ததை திட்டப்பணிப்பாளர் அவதானித்தார். காலை10.00 மணியளவில் திடீரென 'றுகுணு' கப்பலை திருப்பிக் கொண்டு காங்கேசன்துறை

லாளர்களுடனும் செயலக திட்டப் பணிப்பாளருடனும் ழு

து வருமாறும் உத்தரவுவந்து கொண்டேயிருந்தது

### கடற்படை சுற்றிவளைத்தது:-

இத்தவேளை காங்கேசன் கடற்படைத்தளத்தில் இருந்து ஒரு பாரிய கடற்படை யுத்தக் கப்பலும் இரு பீரங்கிப்படகுகளும் புறப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி விரைந்து வந்தன கடற்படையின் யுத்தக்கப்பல் துறைமுகத்தில் இருந்து சிலமைல்தொலைவில் தரித்து நின்றது இரு பீரங்கிப்படகுகளும் றுகுணு கப்பலுக்கு அண்மையாக சுமார் 25யார்.இடைவெளியில் வந்து சுற்றி வளைத்துக் கொண்டன. அத்துடன்பருத்தித்துறைதுறைமுகத்தில் தரித்து நின்ற''குமண'', ''வாதுவ'' ஆகிய இரு கப்பல் கப்டன்களுக்கும் காங்கேசன் கடற்படைத்தளத்தில் இருந்துவானொலித் தகவல் கிடைத்த வண்ணம் இருந்தன. றுகுண கப்பலை பாதுகாப்பாக காங்கேசன்

துறை இறங்குதுறையில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பரபரப்புடன் பார்த்த வண்ணமிருந்தனர். யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதனும் துறைமுக தொழிலாளர்களும் ஏமாற்றத்துடன் இறங்குதுறை வந்தடைந்தனர்.

### றுகுணுவில்வந்தவை

தேறறுபருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து திரும்பிய 'றுகுணு' கப்பலில் மண்ணெண்ணெய்1250பரல், டீசல் 497பரல் என்சின் ஓயில்100 பரல், பிறேக் ஓயில் 42பரல், யூரியா உரம்1000 மூடைகள், தேங்காய் எண்ணெய்200பரல் அப்பியாசக் கொப்பிகள் 93

# தெரிவுக்குழுவிலிருந்து சுதந்திரக் கட்சி விலகியது

## மங்கள முனசிங்காவும் விலகினார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண என அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி விலகிக்கொண்டு விட்டதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

மேலும் தெரிவுக்குழுவின் தலைவரான மங்கள முனசிங்கவும் இத் தெரிவுக்குழு கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டார் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைஎதையும் முன்வைக்கவில்லை இந் நிலையில் இத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வது பயனற்றது. அரசாங்கம் யோசனை எதையும் முன்வைக்காத நிலைமையில் ஏனைய கட்சிகள் தமது யோசனைகளை முன்வைக்கவோ அல்லது கொள்கையில் மாற்றம் செய்யவோ தயங்குகின்றன.

தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுக்காண முயற்சிகளை மேற்கொள்வதை விடுத்து கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது ராஜீவ்-ஜே. ஆர். ஒப்பந்தத்தில் காணப்படும் ஒரு விடயமாகும். எனவே சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது இந்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதாக அமையும் அதற்கு துணைபோக நாம் விரும்பவில்லை என்றார்.

---

இருட்டறையில்

னால் கைது செய்யப்பட்டதும் எங்களை சுட்டு விடுவார்கள் என்று கருதினோம். ஆனால் அவர்கள் மனிதாபிமானமுள்ளவர்கள் இனவெறியர்கள் அல்ல என்பதை இதன் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர் என்றார். (யோ)

# பெற்றோரை அனுப்புவது செஞ்சிலுவையின் பொறுப்பு

யுத்தக் கைதிகளாகவுள்ள தமது உறவினர்களை பார்வையிடச் சென்று தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களை கொழும்பிற்கு அழைத்துவரும் பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையே சார்ந்தது என இராணுவ அதிகாரிகள் ஐலண்ட் பத்திரிகைக்கு தெரிவித்தனர்.

அவ் உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே யாழ்ப்பாணம் சென்றனர் எனவே அவர்களைத் திருப்பி அழைத்துவரும் பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தையே சாரும் எனவும் அவ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

கருத்தரங்கு

''பெண்களும் ஆக்கத்திறன் அபிவிருத்தியும்'' என்னும் தலையங்கத்திலான கருத்தரங்கம் இன்று சண்டிலிப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அறுபது பெண்கள் கலந்து கொள்ளும் இக் கருத்தரங்கை உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

---

மக்களை

அவரது வீட்டில் இருந்து காலை 8-00 மணிக்கு எடுத்துவரப்பட்டு நாகர் கோயில் வாசிகசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். 8-45 மணிக்கு அங்கிருந்து பருத்தித்துறை - மருதங்கேணி வழி ஊடாக மாமுனைக்கு எடுத்துச் செல்லப்படும். மாமுனைச் சந்தியில் பொதுமக்களின் பார்வைக்கு 9-45 மணி தொடக்கம் 10-45 மணிவரை வைக்கப்படும். அங்கு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும். பின் தாழையடி கடற்கரை வீதி வழியாக தாழையடிச் சந்திக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மருதங்கேணி சந்தியை அடைந்து மருதங்கேணி - பருத்தித்துறை வீதி வழியே எடுத்துச்செல்லப்பட்டு 2-00 மணிக்கு நெல்லியடியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். 2-30 மணிக்கு பருத்தித்துறை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு 3-00 மணிக்கு பருத்தித்துறை பஸ் சாலைக்கு (டிப்போ) முன்பாக மக்கள் அஞ்சலிக்குவைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டம்நடைபெறும்3 30 மணிக்கு வித்துடல் கடற்கரை வீதி வழியே எடுத்துச் செல்லப்பட்டு ஆதிகோவிலடி மாவீரர் பூங்காவில் 4.30 மணிக்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்படும். 5-15 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தொண்டமனாறு வீதி வழியாக உடுப்பிட்டி ஊடாக எல்லாங்குளம் மாவீரர் துயில்

# வடகிழக்கு அகதிகளுக்கு ஜேர்மனி 28கோடி உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கிலுள்ள அகதிகளுக்கென ஜேர்மனி 28கோடி ரூபாவை வழங்குகின்றது. அகதிகளுக்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கான பல திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களும் மேற்கொள்ளவுள்ளன.

தற்போது 28 அரசசார்பற்ற நிறுவனங்கள் வடக்கு கிழக்கு அகதிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்துவருகின்றன நிதி உதவிக்கான ஒப்பந்தத்தில் ஜேர்மன் தூதுவரும், நிதியமைச்சின் செயலர் பாஸ்கரலிங்கமும் கைச்சாத்திட்டனர்.


## விற்பனைக்கு வந்துவிட்டன

எமது அடுத்த தொகுதி புத்தகங்கள்
விற்பனைக்கு வந்து விட்டன

குறைந்த விலை! நிறைந்த சேவை
நாடவேண்டிய இடம்

தமிழ்த்தாய் புத்தகசாலை
191, மின்சாரநிலைய வீதி,
(பஸ்நிலைய அருகாமை)
(சி/6926) யாழ்ப்பாணம்.



## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

தேசிய தொழில் பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடாத்தும் மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18—25 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல்வேண்டும். விண்ணப்பதாரிகள் தாங்கள் வதியும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க, பிரிவுத் தலைவர்/செயலாளரின் சிபார்சுடன் 07-07-93 புதன்கிழமை, முற்பகல்9-00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

### சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சி (ஆங்கிலம்)

ஆங்கிலத்திலும், கணிதத்திலும் திறமைச் சித்தியுடன் எல்லாமாக ஆறுபாடங்களில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சி (தமிழ்)

தமிழிலும், கணிதத்திலும் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
30-06-93. (சி/6925)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மைக்கு முன்னதாக அவ் அனு மதிச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ் வாணிப சான்றிதழ்களைப் பெறத்தவறுவோர் மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தந்த பிரதேசங்களில் உள்ள தமிழீழ காவல்துறையின் காவல் பணிமனைகள் மேற்கொள்ளும் என்பதை அறியத்தருகிறோம்.

விபத்தில்

தில் தொழிலாளி படுகாயமடைந்து பின்னர் மரணமானார்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தின் போது மயிலிட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவபாலன் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

(யோ)

## 'கரும்புலிகள்'

இராணுவத் தளபதி திரு. பால்ராஜ் அவர்கள் வெளியிட்டு வழங்க தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் பெற்றுக்கொள்வார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

இயலிசை வாரிதி கி. வீரமணிஐயர், யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவத் துறையைச் சேர்ந்த வண கலாநிதி ஏ.ஜே.வி. சந்திரகாந்தன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதர் வீ. பரந்தாமன் ஆகியோர் மதிப்புரை வழங்குவார்கள்.

கலை, பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி கலைமணி அவர்கள் நன்றியுரை நிகழ்த்துவார்.

வில் வந்த பொருள்களைப் பொறுப்பேற்பதற்காக பருத்தித்துறை துறைமுகத்துக்கு விரைந்தார்.

கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களின் பட்டியல் திட்டப்பணிப்பாளரிடம் வழங்கப்பட்டு பொருள்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதற்கான பத்திரம் ஒன்றும்திட்டப் பணிப்பாளரால் ஒப்பமிடப்பட்டது.

### நாடகம் ஆரம்பம்:-

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்ததை திட்டப்பணிப்பாளர் அவதானித்தார். காலை10.00 மணியளவில் திடீரென 'றுகுணு' கப்பலை திருப்பிக்கொண்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரும்படி காங்கேசன் கடற்படைத் தளத்தில் இருந்து மேற்படி கப்பல் கப்டனுக்கு வானொலித் தகவல் ஒன்று கிடைத்ததிலிருந்து கப்பலில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நேரத்தில் மேற்படி கப்பலில் இருந்து சுமார் 100 பீப்பா டீசல், தீப்பெட்டி ஆகியவற்றை ஏற்றிய இழுவைபடகு ஒன்று துறைமுகஇறங் குதுறையைநோக்கிச்சென்று கொண்டிருந்தது எனினும் உத்தரவுக்கு அமைய இறக்கிய மேற்படி பொருள்களை விட்டுவிட்டு கப்பல் காங்கேசன் துறைமுகத்தை நோக்கி புறப்படத் தயாரானது.

### உத்தரவு கடுமையாகியது:-

ஆனால் இறக்கிய பொருள்களை மீண்டும் ஏற்றிக்கொண்டு உடனடியாக காங்கேசனுக்குத் திரும்பும்படி மீண்டும்மீண்டும்கடுமையான அவசரத் தகவல்கள் வானொலி மூலம் கிடைத்தவண்ணம் இருந்தன. இறக்கியபொருள்களை இழுவைப்படகுடனும், தொழி

ஒரு பாரிய கடற்படை யுத்தக் கப்பலும் இருபீரங்கிப்படகுகளும் புறப்பட்டு பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி விரைந்து வந்தன கடற்படையின் யுத்தக்கப்பல் துறைமுகத்தில் இருந்து சிலமைல்தொலைவில் தரித்து நின்றது. இரு பீரங்கிப்படகுகளும் றுகுணு கப்பலுக்கு அண்மையாக சுமார் 25யார்.இடைவெளியில் வந்து சுற்றி வளைத்துக் கொண்டன. அத்துடன்பருத்தித்துறைதுறைமுகத்தில் தரித்து நின்ற "குமண", "வாதுவ" ஆகிய இரு கப்பல் கப்டன்களுக்கும் காங்கேசன் கடற்படைத் தளத்தில் இருந்துவானொலித் தகவல் கிடைத்தவண்ணம் இருந்தன. றுகுண கப்பலை பாதுகாப்பாக காங்கேசன் துறைமுகத்துக்கு அழைத்து வரும்படி இந்த வானொலித் தகவல்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்தன.

### அதிகாரிகள் குழப்பம்:

இந்த அவசர உத்தரவைத் தொடர்ந்து கப்பல் தலைவர்களும் கப்பலில் இருந்த யாழ். செயலக திட்டப்பணிப்பாளரும், செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதியும் சிறிதுநேரம் செய்வதறியாது குழப்பமடைந்தனர்.

### கப்பலேறிய பொருள்கள்

தொடர்ந்து இழுவைப்படகில் இறக்கிய பொருள்கள் மீண்டும் றுகுணு கப்பலில் அவசர அவசரமாக திருப்பி ஏற்றப்பட்டன.

கடற்படை யுத்தக் கப்பல் ஒன்றும் இரு பீரங்கிப் படகுகளும் பாதுகாப்பு வழங்க "வாதுவ" கப்பல் புடைசூழ றுகுணு கப்பல் நண்பகலுக்கு சற்று பின்னர் காங்கேசன் துறைமுகத்தை நோக்கிச் சென்றது. "இந்த நடுக்கடல் நாடகத்தை" பருத்தித்

வைக்கவுள்ளார்.

துறை இறங்குதுறையில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பரபரப்புடன் பார்த்த வண்ணமிருந்தனர். யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதனும் துறைமுக தொழிலாளர்களும் ஏமாற்றத்துடன் இறங்குதுறை வந்தடைந்தனர்.

### றுகுணுவில்வந்தவை

நேறறுபருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து திரும்பிய 'றுகுணு' கப்பலில் மண்ணெண்ணெய்1250பரல், டீசல் 497பரல் என்சின் ஒயில்100 பரல், பிறேக் ஒயில் 42பரல், யூரியா உரம்1000 பைகள், தேங்காய் எண்ணெய்200பரல் அப்பியாசக் கொப்பிகள் 93 பைகள் தீப்பெட்டி138பைகள் எடுத்து வரப்பட்டனர்.

(ஈ)(நி)(யோ)

எடுத்துச்செல்லப்பட்டு 2-00 மணிக்கு நெல்லியடியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். 2-30 மணிக்கு பருத்தித்துறை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு 3-00 மணிக்கு பருத்தித்துறை பஸ் சாலைக்கு (டிப்போ) முன்பாக மக்கள் அஞ்சலிக்குவைக்கப்பட்டு அஞ்சலி கூட்டம்நடைபெறும்3 30 மணிக்கு வித்துடல் கடற்கரை வீதி வழியே எடுத்துச் செல்லப்பட்டு ஆதிகோவிலடி மாவீரர் பூங்காவில் 4.30 மணிக்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நாடத்தப்படும். 5-15 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தொண்டமனாறு வீதி வழியாக உடுப்பிட்டி ஊடாக எல்லாங்குளம் மாவீரர் துயில் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு மாலை 6 மணியளவில் வித்துடல் விதைக்கப்படும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 29-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10121

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 41-9327, | 41-2659, | 43-2524, | 24-5955 | 27-9772 |
| 28-4367, | 27-5077, | 27-6583, | 24-1983 | 26-9755 |
| 27-4023, | 43-4045, | 26-4882, | 26-0032 | 42-1464 |
| 27-0089, | 24-5167, | 26 4809, | 28-1677 | 24-6161 |
| 26-8419, | 24-5509, | 41-0488, | 26-0691 | ,24-5437 |
| 41-6686, | 26-2291, | 40-7188, | 41-9995 | 42-9625 |
| 24-1209, | 28-7662 | | | |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-5281, | 26-3628, | 28-5294, | 26 4648 | 42-3945 |
| 26-2297, | 24-7078, | 26-4727, | 26-9495 | 26-1658 |
| 28-9633, | 42-3339, | 26-1741, | 24-4726 | 42-1325 |
| 27-9090, | 22-2250, | 24-8079, | 41-9696 | 26-5244 |
| 28-9917, | 26-2421, | 40-2829 | 42-6511 | 41-9652 |

### 30-06-93


எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10142

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-6505, | 27-2088, | 24-4361, | 28-9186 | 41-9791 |
| 26-8051, | 42-2355, | 28-9305, | 26-0514 | 26-0508 |
| 27-8155, | 24-4957, | 42-2317, | 28-3528 | 28-6020 |
| 24-6431, | 42-3267 | 24-5418, | 28-0587, | 26-0407 |
| 27-5217, | 26-3998 | 26-8138, | 26-4726, | 40-4760 |
| 24-6475, | 41-5599 | 26-5157, | 27-1027, | 42-2317 |
| 27-0493 | | | | |

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 28-2049, | 26-3654, | 41-6933, | 22-3611 | 26-0512 |
| 27-2143, | 24-7087, | 41-8626, | 24-2161 | 40-1655 |
| 24-0878, | 24-8429, | 28-7560, | 26-0786 | 26-3812 |
| 24-8603, | 26-5782, | 24-2860, | 26-6026 | 41-5605 |
| 24-3071, | 40-1737, | 28-4183, | 24-0207 | 42-9326 |


# UNIKCO
## COMPUTER CENTRE

★ BASIC ★ PASCAL ★ d BASE III PLUS
★ LOTUS 1-2-3 ★ WORD PROCESSING
(Word Star Rel 5-5)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்:

3-7-93 (சனி, ஞாயிறு) 2-7-93 (திங்கள், புதன், வெள்ளி)

மேலதிக விபரங்கட்கு:
37, CLOcK TOWER ROAD, JAFFNA
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை) (சி-6927)